செ.வெ.எண்: 31 நாள்: 11.11.2016

**புதுக்கோட்டை மாவட்டத்தில் அனைத்து சுகாதாரத்திட்டங்கள் குறித்த ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் பொது சுகாதாரத்துறையின் சார்பில் அனைத்து சுகாதார திட்டங்கள் குறித்த ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (11-11-2016) நடைபெற்றது.

இந்த அனைத்து சுகாதார திட்டங்கள் குறித்த ஆய்வுக்கூட்டத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் துவக்கி வைத்து பேசியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். இதன்படி நமது மாவட்டத்தில் சுகாதாரத்துறையில் தமிழகஅரசின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் அனைத்து சுகாதாரத்திட்டங்கள் குறித்த ஆய்வுக்கூட்டம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இக்கூட்டத்தில் மாவட்ட நலச்சங்கம், குடும்ப நல அறுவை சிகிச்சை தர நிர்ணயம், தனியார் மருத்துவமனைகள் குடும்பநல அறுவை சிகிச்சை செய்திட அங்கீகாரம் வழங்குதல், அரசு அலுவலர்களுக்கான மருத்துவக்காப்பீட்டுத்திட்டம், டாக்டர்.முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித்திட்டம், நோயாளர் நலச்சங்கம், தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச்சங்கம் உள்ளிட்ட பல்வேறு சுகாதாரத்திட்டங்கள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில் ஆரம்ப சுகாதார நிலையங்களில் கர்ப்பிணி தாய்மார்கள் சிகிச்சை விபரம், குழந்தை பிறப்பு விகிதம், குழந்தைகளுக்கு தடுப்பூசி போடப்பட்ட விபரம், இராணியார் மருத்துவமனையில் குழந்தை பிறப்பு விகிதம், இரத்த வங்கிகளின் செயல்பாடுகள், மருத்துவ உபகரணங்களின் செயல்பாடுகள், மருத்துவமனைகளில் அடிப்படை வசதிகள், குடும்ப கட்டுப்பாடு அறுவை சிகிச்சை மேற்கொண்ட விபரம், மாற்றுத்திறனாளிகள் அடையாள அட்டை வழங்கிய விபரம், காசநோயாளிகளின் எண்ணிக்கை மற்றும் வழங்கப்படும் சிகிச்சைகள், எச்.ஐ.வி-ஆல் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை, தொடர் கூட்டு மருந்து சிகிச்சைகள் மற்றும் நம்பிக்கை மையத்தில் வழங்கப்படும் ஆலோசனைகள், கண் பரிசோதனை முகாம் மற்றும் கண் பரிசோதனை செய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கை உள்ளிட்ட பல்வேறு தகவல்கள் கேட்டறிந்து ஆய்வு செய்யப்பட்டது.

இந்த ஆய்வில் அனைத்து மருத்துவர்களும் நோயாளிகளுக்கு சிறப்பான சிகிச்சை அளிக்கவும், குடும்ப கட்டுப்பாட்டின் அவசியம் குறித்து பொதுமக்களிடம் போதிய விழிப்புணர்வு ஏற்படுத்தவும், எச்.ஐ.வி-ஆல் பாதிக்கப்பட்டோருக்கு நம்பிக்கை மையத்தின் மூலம் தொடர் மருத்துவ ஆலோசனைகள் வழங்கவும், கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தின் மூலம் சத்தான உணவு வழங்கவும், உணவு பாதுகாப்புத்துறை அலுவலர்கள் உணவின் தரத்தினை பரிசோதிக்கவும், கண் நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிறந்த முறையில் கண் அறுவை சிகிச்சை செய்யவும், கிராமப்புறங்களில் ஊரக வளர்ச்சித்துறை மூலம் பணியாளர்களை கொண்டு தூய்மை பணியினை மேற்கொள்ளவும் சம்மந்தப்பட்ட மருத்துவ அலுவலர்கள் மற்றும் பல்வேறு துறை அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இக்கூட்டத்தில் புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர் மற்றும் தனி அலுவலர் மரு.டி.பரிமளதேவி, இணை இயக்குநர் (பொது சுகாதாரம்) மரு.ஷம்சாத்பேகம் மற்றும் மருத்துவ அலுவலர்கள் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**